**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>HMOP.NO.13/2024</u>** **தேதி.09.12.2024**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... மா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 09.12.2024 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமரேசன் |
| த/பெ. | : | கஜேந்திரன் |
| வயது | : | 45/2024 |
| தொழில் | : | தனியார் கம்பெனி |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | தென்நந்தியாலம் |
| வட்டம் | : | இரத்தினகிரி |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். திருமணத்தின் போது நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து போட்ட 16.05.2008 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் **ம.த.சா.ஆ.1** ஆகும். திருமணத்தின்போது நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட திருமண புகைப்படம் **ம.தா.சா.ஆ.2** ஆகும். என்னுடைய ஆதார் அட்டை நகல் **ம.தா.சா.ஆ.3** ஆகும்.(**ம.தா.சா.ஆ.3** அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டது). நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு 09.10.2023 அன்று ஒரு சட்ட அறிவிப்பினை அனுப்பினேன். அந்த அறிவிப்பின் அசல் **ம.தா.சா.ஆ.4** ஆகும். மேற்படி அறிவிப்பை எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **ம.தா.சா.ஆ.5** ஆகும். மனுப்படி தீர்ப்பளிக்கும்படி பிராத்தித்துக்கொள்கிறேன்.